DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 126/2015

PROSECUTION WITNESS L.W.8/P.W.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஷ்வபிரகாஷ் | தகப்பனார் பெயர் | மோகனசுந்தரம் |
| கிராமம் | மூலப்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | நகை அடகு கடை | வயது | |

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 07.10.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, மூலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நகை அடகு கடை வைத்து நடத்தி வருகிறேன்.

2) நான் இதற்கு முன்பு நாடார் மேட்டில் அக்ஷயா ஜூவல்லரி என்ற பெயரில் கடை வைத்திருந்தேன். 11 வருடத்திற்கு முன்பாக ஒரு நபர் எனது கடைக்கு வந்து செயின் மற்றும் அரைஞாண் கயிற்றை என்னிடம் கொடுத்து தங்கமா என பரிசோதித்து பார்க்கக் கூறியதன்பேரில் நான் பார்த்துவிட்டு, அது கவரிங் என்று அவரிடம் திருப்பிகொடுத்து விட்டேன். 11 வருடங்கள் ஆனதால் கடைக்கு வந்த அந்த நபரை என்னால் அடையாளம் சொல்ல முடியாது, அவர் பெயரும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) 07.01.2014 ம் தேதி, சுமார் பகல் 2.00 மணிக்கு நான் கடையில் இருந்த போது 2 ம் எதிரி ஆனந்த் எனது கடைக்கு வந்து கவரிங் அரைஞாண் கயிறு மற்றும் கவரிங் செயினை கொடுத்து அடமானம் வைத்துக் கொண்டு பணம் தரும்படி கேட்டாரா என்றால் 2 ம் எதிரி தான் கொடுத்தாரா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அவர் கொடுத்த நகை கவரிங் என தெரியவந்ததால் அவரிடம் திருப்பி கொடுத்துவிட்டேனா என்றால் திருப்பிக் கொடுத்தேன் ஆனால் 2 ம் எதிரியிடம் தான் கொடுத்தேனா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. 06.01.2014 ம் தேதி, வெண்ணிலா என்பவர் வீட்டில் நகை மற்றும் பணம் களவு போனதாக தாலுக்கா காவல்நிலைய உதவி ஆய்வாளர் எனது கடைக்கு வந்து என்னை விசாரித்தபோது, 2 ம் எதிரி எனது கடைக்கு வந்து மேற்படி களவு போன நகைகளை என்னிடம் கொடுத்து பணம் கேட்டதாகவும், போலி நகை என

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.10.07 17:15:59 +0530

தெரியவந்ததால் எதிரி சாக்கடையில் நகைகளை வீசிவிட்டதாக கூறினாரா என்றால் என்னை கேட்டார்கள் நான் நகையை திருப்பிக் கொடுத்துவிட்டேன் என கூறினேன். மேற்படி என்னிடம் நகையை கொடுத்த 2 ம் எதிரியை எனக்கு அடையாளம் தெரியும் என்றாலும், தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது பெயர் விஷ்ணு பிரகாஷ் இல்லை என்றால் சரிதான்.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.10.07 17:16:05 +0530

Judicial Magistrate No.I,

Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 126/2015

PROSECUTION WITNESS L.W.7/P.W.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராஜ் | தகப்பனார் பெயர் | துரை |
| கிராமம் | மூலப்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | கூலி | வயது | |

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 07.10.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, மூலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி ஆனந்தின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். தேதி, வருடம் ஞாபகம் இல்லை. ஒருநாள் நான் முள்ளாம்பரப்பு பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது தாலுக்கா காவல்நிலைய உதவி ஆய்வாளர் என்னிடம் கையொப்பம் பெற்றார். எதற்காக என்று எனக்கு தெரியவில்லை. வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாது. **(எதிரி ஆனந்தின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து, எதிரி ஆனந்த் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.500/- மற்றும் கவரிங் அரைஞாண் கயிறு, கவரிங் செயின் ஆகியவற்றை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 10.01.2014 ம் தேதி, காலை சுமார் 9.00 மணிக்கு முள்ளாம்பரப்பு பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது, தாலுக்கா SI என்னிடம் இவ்வழக்கு ஒன்றில்

Digitally signed by VANJI NATHAN R Date: 2025.10.07 17:16:15 +0530
VANJI NATHAN R

குற்றவாளியை தணிக்கை செய்து வருவதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும் படி என்னை கேட்டாரா என்றால் இல்லை. தாலுக்கா SI பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த ஒரு நபரை பிடித்து விசாரணை செய்த போது அவர் தனது பெயர் ஆனந்த் எனவும் 06.01.2014 ம் தேதி, இரவு 11. 30 மணிக்கு வெண்ணிலா என்பவர் வீட்டில் நகை மற்றும் பணத்தை கூட்டாளி செல்வம் என்பவருடன் சேர்ந்து திருடிய குற்றத்தை ஒப்புக் கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. மற்றும் தான் தனது கூட்டாளி செல்வத்திடம் ரூ.8000/- த்தை கொடுத்துவிட்டு மீதி 2000/- த்தை களவாடிய பணத்தையும், நகைகளையும் வைத்துக் கொண்டதாகவும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை என் முன்னிலையில் கைது செய்யதாரா என்றால் இல்லை. கைது செய்த எதிரி ஆனந்த் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை போலீசார் பதிவு செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றனரா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.500/- மற்றும் கவரிங் அரை ஞான் கயிரையும், கவரிங் செயினையும் எடுத்து ஆஜர் செய்ததை என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்களா என்றால் இல்லை. மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவது சாட்சி கையொப்பமும், 2 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எனக்கு எதுவும் தெரியாது என மாற்றி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**இல்லை.**

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.10.07 17:16:20 +0530

Judicial Magistrate No.I,

Erode.